# அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மறு தர மதிப்பீட்டிலும் "ஏ" தகுதி பெற்றது)

நாள் : 22.2.2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக கலைமன்றம், இளைஞர் நலம் மற்றும் ஆற்றல் படுத்தும் மையம் ஆகியன இணைந்து அழகப்பா பல்கலைக்கழக கல்லூரிகளுக்கிடையேயான 'அழகு ஆரம் 2017'கலைவிழா நிகழ்ச்சியினை 24.2.17 மற்றும் 25.2.17 ஆகிய நாட்களில் நடத்தியது.




இதன் தொடக்கவிழாவில் அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பேரா.எஸ்.சுபாஸ்சந்திரபோஸ் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். அவர் தமது உரையில் மாணவர்கள் தங்கள் கலைத்திறமைகளை வளர்த்துக் கொள்ளவேண்டியது அவசியம் என்றார். மாணவர்கள் தங்களுக்கான இலக்கை நிர்ணயித்துக் கொண்டு அதன் மேல் நம்பிக்கை வைத்து தொடர்ந்து பயணித்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம் எனத்தெரிவித்தார்.



அதனைத் தொடர்ந்து கட்டுரை, கவிதை நாடகம், வாய்பாட்டு, தனிநடனம், கிராமிய நடனம் பலகுரல் பேச்சு மௌன நாடகம், கிராமிய இசைக்குழு ஆகியவற்றில் மாணவ மாணவிகளுக்கு போட்டிகள் நடத்தப்பெற்றது. அழகப்பா பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகளிலிருந்து 400 மாணவ மாணவிகள் இப்போட்டிகளில் பங்கேற்றனர்.

இதன் நிறைவுவிழா இன்று மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது. அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா.சொ.சுப்பையா அவர்கள் நிறைவு விழாவிற்கு தலைமையேற்று உரை நிகழ்த்துகையில் யார் தங்களுடைய அனுபவத்தை பிரதிபலிக்கிறார்களோ அவர்களே வெற்றியடைந்துள்ளார்கள் என்றார். வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு பல்வேறு துறைகள் இருக்கின்றன. அவற்றில் கலைத்துறையும் ஒன்று. நாம் நினைத்ததை அடைய எத்தனையோ தடைகளை நாம் சந்திக்க வேண்டிவரும். அவற்றை சவாலாக எடுத்துக் கொண்டு படிப்படியாக முன்னேறினால் வெற்றியை நிச்சயம் எட்ட முடியும். நமது கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் காப்பதற்கு கலையார்வம் மிக்க மாணவர்கள் இது போன்ற கலை விழாக்களில் பங்கேற்பது குறித்து பெருமைப்படுவதாக தெரிவித்தார்.




தேசிய விருது பெற்ற பசங்க திரைப்பட இயக்குநர் திரு.சி.பாண்டியராஜ் நிறைவுவிழா பேருரையாற்றினார். அவர் தமது உரையில் மாணவர்களிடையே எண்ணம் தெளிவாக இருக்க வேண்டும். உறுதியான கொள்கை மிக மிக அவசியம். நமக்குள் என்ன திறமை இருக்கிறது என்று நமக்கே தெரியாது. ஆதலால் முதலில் நமது திறமை மீது நம்பிக்கை வைத்து இலக்கை நோக்கி பயணித்தால் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றியடைய முடியும் என்றார்.

பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்ற பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர் மற்றும் துணைவேந்தர் பரிசுகளை வழங்கி பாராட்டினர். அனைத்து போட்டிகளிலும் கலந்துகொண்டு வெற்றிபெற்ற தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணமலை கல்லூரி முதலிடம் பெற்று 'அழகுஆரம் 2017 கலை விழா' கோப்பையை வென்றது. இரண்டாமிடத்தை காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரி பெற்றது.

இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக பதிவாளர் பேரா.வி.பாலசந்திரன் கணினி பயன்பாட்டியல் துறை பேராசிரியர் வெ.பழனிச்சாமி இளைஞர் நல மையத்தின் ஒருங்கினைப்பாளர் பேரா.பி.தர்மலிங்கம் கல்லூரி வளர்ச்சிக் குழும முதன்மையர் பேரா.ராஜ்மோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அழகப்பா பல்கலைக்கழக கலை மன்றத்தின் ஒருங்கினைப்பாளர் பேரா.கி.மகேஷ் அனைவரையும் வரவேற்றார். நுண்கலை மைய உதவிப் பேராசிரியை கனகதாரா நன்றி கூறினார்.

பேரா.வி. பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)